1979 பிப்ரவரி 17]

(ஆ) ஆங்கிலத்தில் வினாப்பட்டியல் வைக்கப்பெறுவது குறித்து.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவரவர்களே, தமிழை ஆட்சி மொழியாக ஆக்குவதற்கு தினசரி இங்கே நாங்கள் போராடவேண்டியிருக்கிறது. ஏனென்றால், இந்த சட்டமன்றத்தில் கூட இங்கே வைக்கப்படும் வினாப்பட்டியல் ஆங்கிலத்தில் வைக்கப்பட்டு இருக்கிறது. இங்கே முதலிடம் ஆங்கிலத்திற்கா, தமிழுக்கா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரின் உணர்வுகளை உணர்கிறேன். ஆங்கிலம், தமிழ் இரண்டு மொழிகளிலும் தரப்படுகிறது. உறுப்பினர் முதலாவதாக எதைக் கையில் எடுத்துக் கொள்கிறாரோ அது அவரிடம் முதலிடம் பெறுகிறது. இன்று எடுத்துக்கொள்ளப்பெற்றிருக்கிற வினாப்பட்டியல் இரண்டு நாட்களுக்கு முன்பே உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றிருக்கிறது.

திரு. துரை முருகன் : இங்கே அனுப்பப்பட்டிருக்கும் சுற்றறிக்கை கூட ஆங்கிலத்தில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கேள்விப் பட்டியலைப் பற்றித்தான் பேசுகிறார்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவரவர்களே, நான் சொல்வதை கொஞ்சம் கேட்டுவிட்டுச் சொல்லுங்கள். ஆங்கிலத்தில் வேண்டும் என்று நான் கேட்கவில்லை. விரும்புகிறவர்களுக்கு ஆங்கிலத்தில் கொடுக்கட்டும், இங்கே பெருவாரியாக தமிழில் நிகழ்ச்சிகள் நடைபெறுவதால் தமிழில்தான் கொடுக்க வேண்டும். ஆங்கிலத்தில் வேண்டும் என்கிறவர்கள் பெயர் பட்டியலை அவர்கள் குறித்து வைத்துக்கொண்டு அவர்களுக்கு மட்டும் ஆங்கிலத்தில் அனுப்பட்டும். சபாநாயகருக்கும், அமைச்சர்களுக்கும் வேண்டுமானால் ஆங்கிலத்திலும் கொடுக்கட்டும் இங்கே அவைமுன் வைக்கப்படுகிற பட்டியல் தமிழில்தான் இருக்கவேண்டும். அதற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இனிமேல் எனக்கு தமிழில்தான் வரவேண்டும். ஆங்கிலத்தில் வருமானால் கிழித்து எறிவேன் என்பதை நான் இந்த அவையில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, வீட்டிற்கோ, விடுதிக்கோ அனுப்பப்படுகிற பட்டியல் தமிழ் மொழியில் இருக்கிறது. இங்கே அவையில் வைப்பது ஆங்கிலத்தில் இருக்கிறது, தமிழ் மொழியில் பட்டியல் வீட்டிற்கு அனுப்கப்பப்பட்டிருந்தாலும் அதை சிலபேர் எடுத்துக்கொண்டு

வராமல் இருக்கலாம். ஆகவே, அவையில் வைப்பதும் தமிழில் வைத்துவிட்டால் இந்தப் பிரச்னை வராது. அதற்கு ஏற்பாடு செய்தால் நன்றி உடையவனாக இருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர்கள் கூத்தக்குடி சண்முகம் அவர்கள் சொன்னதையும், திரு. லத்தீப் அவர்கள் சொன்னதையும் நான் உணர்கிறேன். நீங்கள் சொன்ன கருத்தை நான் செயலாளரிடம் தெரிவித்து, இனிமேல் தமிழிலே தரவேண்டும், விரும்புகிறவர்களுக்கு ஆங்கிலத்தில் தரவேண்டும், என்கிற வகையில் ஏற்பாடு செய்கிறேன். அவையில் உறுப்பினர்களுக்காக மேசை மீது வைப்பதும் தமிழில் இருக்க வேண்டும் என்றும் சொல்கிறேன். இந்த முறை நாளையதினம் முதல் பின்பற்றப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10–20]

(இ) உறுப்பினர்களுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுப்பது பற்றி.

திரு. து. இராமசாமி : தலைவரவர்களே, சட்டசபை எதிர்கட்சிகளுடைய அலுவலகங்களிலே தொலைபேசி வசதி இல்லாமல் இருக்கிறது. நாடாளுமன்றத்திலே எதிர்க்கட்சி அலுவலகங்களுக்கு எல்லாம் தொலைபேசி வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். அதைப்போன்று நம்முடைய மாநிலத்திலும் தொலைபேசி வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று தமிழ்நாட்டில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு டெலிபோன் டைரக்டரி கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதையும் உறுப்பினர்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : சார், மாண்புமிகு உறுப்பினர் சொல்வது மிக முக்கியமான விஷயம். இங்கே அங்கத்தினர்கள் அறைக்கே டெலிபோன் இருக்கும்போது கட்சி அலுவலகங்களுக்கு இல்லாமல் இருப்பது வருந்தத்தக்கது, ஆபீசில் பல வேலைகள் நடைபெறுகின்றன. ஆகவே, அங்கே முக்கியமாகத் தேவைப் படுகிறது. ஆபீஸ் ஓல்டு ஆஸ்டலில் இருக்கிறது. ஒரு எக்ஸ்டன்ஷன் லைனாவது உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : நானும் அதைத் தொடர்ந்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் கூறியதை வழிமொழிகிறேன் என்று சொல்லிவிட்டால் போதும். நான் புரிந்துகொண்டேன். தயவுசெய்து உட்காருங்கள். பாராளு